நகல்

உ

ஸ்ரீ ஸாம்ப ஜ்ஞாநாயநம: சேந்தமங்கலம்,
நேரிசை யாசிரியப்பா. 9. 3. 27.

உலகெலாம் போற்றக் குலவிய தீந்தமிழ்
நாட்டிடைப் பிறந்து மேட்டிமை சான்ற
தண்டமிழ்த்தாயின் றொண்டினை வாழ்க்கையாக்
கொண்டரு நூற்கள் பண்டைய வான
பற்பல தமிழ்நூல் டிற்பர அம்படி
யேட்டினிற் பயின்றன நாட்டமோ டாய்ந்து
பதிப்பிற் பதித்துக் கதித்திடு நற்புகழ்
கொண்டிடு மறிவீர் மண்டலம் புகழு
மொழிவளாம் படுத்தலிற் பழகிய வாற்றலுந்
தம்பா லடைவா ரின்புற வவர்தம்
ஐய நீக்கி மெய்யுரை பகருந்
தண்ணருட் பொலிவு மெண்ணிலாத் தமிழ்நூல்
யாவு மாய்ந்திருந் தாவில் மதியுங்
காட்சிக் கெளிமையு மாட்சியா ரொழுக்கமு
மினிமைசேர் மறைக்குலந் தனில்வரு மாண்பு
முற்றிடும் பெரியீர் நற்றவப் புலமையீ
ரெளியேன் சிறிது மளியில் புன்மையேன்
சகநாதனெனும் புகழ மத்தன்
றங்க ளிருசுடர்ப் பங்கய வடிகளிற்
பற்பல வணக்கம் பொற்புற வாற்றிக்
வரையும் நிருபம். புரையறு மோரிரு
திங்களின் முன்னர்ப் பங்கமில் சேந்த
மங்கல ஜமீன்தார் இங்குறை நண்பர்க
ளாகியோ ரோடுங் காதலாற் றம்பாற்
போந்தனன் சிறியேன் சாந்த உருவினீர்
ஆங்கே தங்கள்பாற் பாங்குறப் பயிலும்
வழைவினே னென்பது மொழிவுற வெளியேன்
நெஞ்சமின் புற்றிடத் தஞ்சம ளித்தே
யெம்பா லேபயி லின்பா லேயெனச்
சொற்றது கேட்டுப் பெற்றனென் களியே
தில்லியா லிருப்பினும் வல்லவர் நாடுஞ்
சென்னையா லிருப்பினுந் தன்னியே பயங்க
என்பதுங் கேட்டன னம்பின னிருந்தே
னிருமதி கழித்துப் பெருமதி யாள
தங்கள்பாற் போதத் தங்கனல் லாசியை
விழைகிறேன் பெரும இழிவில்சீர்ப் புலவ
சென்னைக் கேகுத லென்னினி யாயதோ

நகல்

G. 368-370

9-3-1927

நகல்



வறியே னிதுநாள் குறைவறு மதியினேன்
கடிதம் வரையத் தடைபல வுற்றது
தங்க ளாசியி லிங்குறை வாரெலாம்
நன்றே வதிவர் குன்றப் புகழீர்
தங்க ளருளும் பொங்கிய வாழியும்
என்றென் றும்பெற வொன்றிய கருத்தினே
னடியேன் விருப்ப மருளுக
மிடியுளோன் மதிப்பற் றடிமையா கெனவே.

இங்ஙனம்,
தங்கள்
பொற்பத விணைமல ரிற்புகல் காணும்
அடியேன்.
கி.வா. ஜெகந்நாதன்.

எளியேன் விலாசம்.

கி.வா. ஜெகந்நாதன்.
தெய்வீக ஆஸ்ரமம்.
சேந்தமங்கலம்.
நாமக்கல் வழி.

ஸ்ரீ ஸரஸ்வத்யை நம:

வேண்டிய ஸௌகரியம்
செய்துகொண்டு வரலா
மென்று பதிலாயிற்று.
18 · 3 · 27.

நகல்

15

9-3-1927

47 ரு 368-370

உ.வே.ச. ஐயரவர்களுக்கு.
கி.வா. ஜகந்நாதையரவர்கள்
எழுதிய பாடல்.
9.3.27
௨. பக்